REGD No. M. 4642

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10. | 9—9—51 | இதழ் 11.

அவரது சஞ்சலம்!

பல்லக்கு! அதைத் தூக்க பத்துப் ன்னிரெண்டு ஏழைகள்! களேப்பை நைக்க 'ஆகா—ஊகூ' என்று வர்கள் எழுப்பும் கூச்சல்! முன் ும் பின்னும் குதிரைகள் மீது லர்! கொடியொன்று— 'வருகி ர், வருகிறார்' என்பதை அறிவிக்க, ரசம் ஒன்று; ஏழு எட்டு வண்டி ள், அதற்குள் பரிவாரங்கள், அவர்களுக்கான பொருள்கள், இத் ாதி வைபவங்களுடன் இந்தக் ாலத்திலும் பவனி வரும் 'பரப் ிரம்மம்' ஒன்று இருக்கிறது! ஆசாபாசங்கள், கர்மாவின் தூண்டு ல்கள், அதைக் கடப்பவனே தய்வ கடாக்ஷம் பெறுவான்'' ன்று, திருவாய் மலரும் தீனதயா ரின் நேரிய பாம்பரையாம் அவர்! அவருக்குத் திடீரென, இந்த ஜகத் தின் மீதும், ஜடத்தின் மேலும் ன்றுமில்லா அக்கரை பிறந்திருக் கிறது!!

"சுவாமிகள் பரலோகத்தைப் பத்தி பேசிண்டிருந்தா, பிரயோஜன மில்லே. உலகம் கெட்டுண்டே போறது. நாஸ்தீகா பரவிவிட்டா. அதர்மம் கூத்தாடுது. ராஜாக்கள் மதாசாரத்தை மதிப்பதேயில்லே. இதையெல்லாம் விட்டுண்டே போகக் கூடாது.'' என்று பக்த கோடிகள் அவரிடம் போய் முறை யிட்டனராம். இந்த முறையீட் டைத் தெரிவித்து அந்த மதாச்சாரி யார், உலகுக்கு — இந்நாட்டுக்கு மட்டுமல்ல!—ஒரு செய்தியொன்றை அனுப்பியிருக்கிறார்.

அந்தச் செய்தியை 'இந்து' இதழ் முக்கிய இடம் கொடுத்து பிரசுரித்திருக்கிறது, சுருக்காது— மறுக்காது.

முடிகோண்டான் என்கிற ஊரி லுள்ள கோதண்டராமஸ்வாமி கோயிலிலிருந்தபடி, அவரால், அந்த அறிக்கை வெளியிடப் படுவ தாக 'இந்து' இதழ் குறித்திருக் கிறது.

முக்கிய பிரச்சினைகளின் போது வெள்ளை மாளிகை என்கிற இடத்தி லிருந்து அமெரிக்க சர்க்காரின் அறிக்கைகளும், டவுனிங் தெருவி லிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரகடனங்களும் வெளி வருகின் றனவல்லவா, அதைப் போலவே, நமது ஆத்மார்த்தீகரும் தமது தலைமை ஸ்தானமான க்ஷேத்ரயிலி லிருந்து வெளியிட்டிருக்கிறார், அந்தச் செய்தியை.

"லோகத்தில் சினிமாக்கள் பரவி விட்டன''

"இகலோக இச்சை மக்களை பிடித்தாட்டுகிறது''

"நித்ய கர்மானுஷ்டங்களைச் செய்யும் நிலை மறைந்து வருகிறது''

"ஆணும் பெண்ணும் சேர்ந்து பள்ளிக்கூடங்களிலே படிக்க ஆரம் பிச்சுட்டா!''

"வேத தர்மம் காக்கப்படுவ தில்லை''

இதுபோல, பற்பல குறைபாடு களை அந்தச் செய்தியில் கொட்டி யிருக்கிறார். அதோடு, 'இந்த விஷ யங்களை தடுத்து நிறுத்த ராஜாங் கம் ஒன்றும் செய்வதில்லை' என் றும், தெரிவித்திருக்கிறார். முன் னாளிலெல்லாம் மதமுனிவர்களின் மார்க்கப்படி நடக்கும் ராஜாக்கள் இருந்தனராம்! குறைகளைப் போய்க் கூறினால், அவர்கள் நிவர்த்தி பெறும் வழியிருந்ததாம்! 'இப் போது அது இல்லையே!' என்றும், அறிக்கை விடுத்த ஆன்மீக சுத்தி, குறிப்பிட்டிருக்கிறார். "நாடு சுய ராஜ்யம் பெற்றுவிட்டது. அதன்படி ஒவ்வொரு மனுஷனும் ஒவ்வொரு ராஜாவாகிட்டான். ஆகவே, எல் லோரையும் ஒழுங்கு வழியில் வைப் பது ராஜாங்கத்தினுடைய கடமை யாகும்; ராஜாங்கத்தை ஆட்டிப் படைப்பதென்றால் அரசியலில் புக வேண்டும்.'' என்பதாகவும், அந்த செய்தியில் தெரிவித்துவிட்டு, மேலும் சொல்கிறார் அவர்! யாரோரோ அவரிடம் போய் தினசரி முறையிட்டுக் கொண்டே உள்ளார் களாம்.

"லோகம் கெட்டுண்டே போறது—பெரியவாள் சிரத்தை கொள்ளணும்—ராஜாங்க விஷயத்தில் சுவாமிகள் ஈடுபடணும்" என்று, தொல்லை பண்ணுகிறார்களாம். அவர்கள் தொந்திரவு அதிகமாயிருக்கிறதாம்!

அரசியலில் என்போன்றார் ஈடுபட வேண்டுமென கருதுகிறார்கள்—இந்தச் செய்தியை, வெளியிட்டிருக்கிறார்—காஞ்சி காமகோடி ஜகத்குரு சங்கராச் சாரியார்!

நகைப்பீர்கள் இதைக் கேட்டால். ஆனால் அந்த 'பரப்பிரம்மம்' சிறிதும் மானாபிமானத்தைப் பற்றி கவலைப்படாது, இதை அறிவித்திருக்கிறது.

அறிவித்த அதே நேரத்தில் அச்சமோ அல்லது 'ஆகுமா, முடியுமா' என்கிற சஞ்சலமோ—குறுக்கிட்டிருக்கிறதுபோலும்.

"ஆச்சார்ய ஸ்வாமிகள், அரசியலில் ஈடுபடவேண்டும் என கூறுகிறார்கள். ஈடுபடலாம். ஆனால் இறைவன் தியாகத்தையும், பக்திப் போதனையையும் செய்ய யார் இருக்கிறார்கள்?" என்று, தெரிவித்திருக்கிறார்—அதே அறிக்கையில், அடுத்த வரியில்.

ஆச்சாரியார், பற்றற்றவர் பரமனுக்கும் பாமரருக்குமிடையே 'பாலம்' அமைப்பவர் என்றெல்லாம் கூறக்கேட்டிருக்கிறோம். அத்தகைய இகலோக இச்சைகளைத் துறந்த அவருக்கேற்பட்டிருக்கிறது இந்த ஆசை.

இந்த ஆசையைத் தெரிவித்திருப்பதைப் பார்த்துகூட அல்ல நமக்கு நகைப்பு அதிகமாவது எதற்காக அரசியலில் ஈடுபடவேண்டுமென அவரது சகபாடிகள் தொல்லை செய்வதாகக் கூறுகிறாரோ அந்தக் காரணத்தைக் காணும் போதுதான், கேலி ஒருபக்கமும் வேதனை மற்றோர் பக்கமும் உருவாகிறது.

மக்கள், மகேஸ்வரனை மறந்துவிட்டனராம். சினிமாக்களிலே சிந்தையைச் செலுத்துகின்றனராம். சேர்ந்து படிக்கிறார்களாம், கல்லூரிகளில். மதாச்சாரம் பாழாகிறதாம்!

"மகேசன் நாமத்தை மக்கள் மறப்பதா? மதாச்சாரம் குறைவதா? ஐயோ! ஐயோ!!" என்று பதறுகிறார்—[illegible]

வேத கர்மப்படி மக்களை நடக்கச் செய்யவும், சனாதனத் தர்மப்படி எல்லாம் நடக்கவுமான முயற்சிகள் சர்க்காரால் எடுக்கப்பட வேண்டுமாம்.

சர்க்காரே, இந்தக் காரியங்களைத் தங்கள் மேற்பார்வையில் கவனிக்க வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார்.

சங்கராச்சாரியார், பல்லக்குவாசி. பாலும் பழமும், காலடியில் கொட்டுகின்றனர். பசி, அவர் அறியாதது. ஏழ்மை, அவர் அருகிலும் நெருங்க முடியாது. சுகபோகம்! இன்பம்!!—இது அவரது நித்திய வாழ்க்கை. அவருக் கேற்பட்டிருக்கும் சஞ்சலம், மதமும் வேதமும் முன்பு போலப் போற்றப்படுவதில்லை என்பது. மதமும் வேதாகமும் அவரது சிந்தையைக் கவர்ந்த பிரச்சினைகள். அதற்காக, அரசாங்கத்திலமர்ந்தாவது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென, அவரது பக்த கோடிகள் தெரிவிப்பதாக, அறிவிக்கிறார்.

சங்கராச்சாரியார் மதம் கடவுள் குறித்து சஞ்சலப்படுகிற இதே சமயத்தில், நாட்டுக்கு கிடைத்திருக்கிறது, ஒரு தகவல்.

* * *

கடந்த 4-ஆம் தேதியன்று சென்னை உயர்நீதி மன்றத்தார், ஒரு வழக்கில் தீர்ப்பு தந்துள்ளனர்.

ஒரு ஏழை, கொலைக்குற்றம் சாட்டப்பட்டு, அவர்கள்முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.

நெடுநாளைய பகையல்ல, அவன் கொலை செய்த காரணம். பசி! பசிக் கொடுமை, அவனைக் கொலைக்காரனாக்கிற்று. கொலை செய்தது வேறு யாரையுமல்ல; அவனது சொந்தக் குழந்தைகளை — இரண்டு சித்திரங்களை!

அவன் தந்தை. அவன் கொலை செய்தான், தனது தங்கச் சித்திரங்களை.

அந்த ஏழை, தான் செய்த குற்றத்தை மறுக்கவில்லை; ஒப்புக் கொண்டான்.

அவன் கொலைசெய்தான். யாரை? எதிரியையா — இல்லை.

ஒரு குழந்தைக்கு வயது ஐந்து; இன்னொன்றுக்கு இரண்டு [illegible]

இரு குழந்தைகளையும் அ[illegible] ஏழை கிணற்றிலே வீசினான்.

ஆசை தவிர்க்கவந்த ஆண[illegible] சித்திரமே! ஓசையளித்து [illegible] உண்ணுகின்ற தேன்வண்[illegible] உள்ளம் எதிர்பார்த்த ஓவி[illegible] என்மடியில் பிள்ளையாய்வந்தபெ[illegible] பேறே! — என்று, குழந்தை[illegible] கொஞ்சத்தெரியாதவனல்ல[illegible] அவன்.

சின்னமலர்வாய் சிரித்தபடி [illegible] குடித்த — காட்சிகளைக் காண[illegible] னல்ல, 'கன்னலின் சாறே! [illegible] ரசமே, கண்ணுறங்கு என்று, [illegible] அருமை மனைவி தாலாட்டித் தூ[illegible] வைத்த, நிகழ்ச்சிகள், அவன் [illegible] ணாரக் கண்டவைதான்.

பொன்முகம்—அதிலே இழை[illegible] புத்தம் புதுநீலமணிக் கண்கொ[illegible] குழந்தைகள்! அவைகளை வீசின[illegible] கிணற்றில்.

சோலைமலர்கள்! சொகுசுச் [illegible] திரங்கள்!! — அவைகளைத் தூ[illegible] எறிந்தான்.

சொர்ணத்தின் வார்ப்படங்[illegible] சொந்தக் குழந்தைகள் — பி[illegible] மாயின.

'அப்பா! அப்பா!! என்று மழ[illegible] பேசிய சிறுவாய், "ஆ! ஆ!!" என[illegible] அலற, தளிர்நடை போட்ட கா[illegible] கள் துடிக்க, அதைக் கண்[illegible] அந்த ஏழை மிருகமானான்!

தனது தங்கக் கட்டிகளை, கிண[illegible] றிலே வீசினான்.

அவன் தந்தை—குழந்தைக[illegible] கொன்றான்.

காரணம், பசி! மலையாள தே[illegible] தைச் சேர்ந்தவன், அவன். பெ[illegible] கந்தன்.

இளம் மனைவியோடு, இரு கு[illegible] தைகளையும் அழைத்துக்கொண்[illegible] கோயமுத்தூர் ஜில்லாவுக்கு வ[illegible] பல இடங்களில் அலைந்தான்; தி[illegible] அல்ல, வேலை பெற!

வேலை கிடைக்குமா, என்று வீ[illegible] கள், கிராமங்கள் எங்கும் அ[illegible] தான்.

அவன்பின்னே செல்ல, இள[illegible] மனைவி பின்னேவர, ஒரு கை[illegible] குழந்தையும் தோளில் மற்றொ[illegible] குழந்தையுமாக, அலைந்தனர். ச[illegible] ரங்கள், அவர்களது தங்குமடங்[illegible] மரங்கள், வெய்யிலுக்கு ஒதுக்[illegible] [illegible]

...லைந்தனர், வேலை கிடைக்க ...லை.

...ட்டினி' ஒரு நாளல்ல, இரு ...ல்ல பல நாட்கள்!!

...சிதாங்க முடியவில்லை. மனை ...யோ, சருகுபோலானாள். இளம் ...ளுந்துகள், வற்றி உலர்ந்து விட் ...ன. வறுமை தாங்க முடியவில்லை!

ஒரு நாள் இரவு. அந்த ஏழை ...ழுந்தான். மனைவியை எழுப்பி ...ன். குழந்தைகளை அணைத்தபடி, ...ந்தாள் அவள். எழுப்பினான்— ...ழுந்திருக்க வில்லை! 'அடியே!' ...ன்றழைத்தான் — பதிலில்லை. ...சைத்தான்—உடல் அசைந்தது; ...வள் கண்விழிக்கவில்லை! ஒரு ...றை, இரண்டுமுறை, பத்துமுறை, ...ல முறை கூப்பிட்டான். அவள் ...ண் திறக்கவில்லை. திகைத்தான். ...வன் இதயம் கொதித்தது. ...றந்து விட்டாளோ?'—எண்ணக் ...ட முடியவில்லை, அவனால். 'என் ...சய்வேன்?' என்று கதறவில்லை. ...ல நாட்கள் பட்டினி. தெரியும் ...வனுக்கு! ஆகாயத்தைப் பார்த் ...ான்! பெருமூச்சு விட்டான்! ஒரு ...ழந்தையைத் தூக்கினான்—பக்கத் ...லே கிணறு, வீசியெறிந்தான்! ...ரு பெரும் சப்தம் — தாலாட்டி ...ராட்டி வளர்த்த சின்னஞ்சிறு ...ளி நீரிலே மூழ்கிற்று!!

திரும்பினான். இன்னொரு ...குழந்தை—இப்போது. பெரும் சப் ...தம்! ஏழையின் சித்திரம், பிணமா ...ற்று!!

கிணற்றிலே பிணங்கள்! கீழே ...மனைவி!!—எதிரே இருட்டு!!!

சிறிது நேரத்துக்கெல்லாம், அந்த ...ஏழை, தொங்கினான், பிணமாவதற் ...காக.

தூக்குப் போட்டுக்கொண்டான். ஆனால், சாவும் அவனுக்குத் துரோ ...கமிழைத்தது!

...க்கம் பக்கத்திலுள்ளோர், சப் ...தம் கேட்டு, ஓடிவந்தனர். காட்சி ...யைக் கண்டு கதறினர்!

பசி மயக்கத்தால், பிணம்போல் கிடந்த அவன் மனைவியும், திடுக் கிட்டு, விழித்தாள். தன்னைத் தழு விக்கிடந்த குழந்தைகளைக் காண வில்லை! திகைத்தாள். 'குய்யோ, முறையோ!' என்று அருகே எழும் பிய கூக்குரல், அவளை பதறச் செய் தது! எழுந்தாள், ஓடினாள். பிண மாகப் புயன்ற கணவனைக் கண்டாள். கதறினாள்! "எங்கே நம் குழந்தை கள்?" என்று அலறினாள். அவன் அழுதான்.

"ஐயோ! எங்கே நம் கண்மணி கள்?" என்று கூவினாள்.

இவன் பேசவில்லை! கிணற்றைப் பார்த்தான்!!

'பாவி!' என்றனர், கூடியிருந் தோர்.

"ஐயகோ!" என்று அலறினாள், அத்தாய்.

அவன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் பேசிற்று! பெற்றுவளர்த்த அந்தப் பெண் மனம், துடித்தது. ஆராரோ பாடிய அத்தாயுள்ளம் 'ஐயகோ' என்று அழுதது. அவன் நடைப்பிணமானான்!

அந்த நடைப்பிணம், கூண்டிலே ஏற்றப்பட்டது. கொலை குற்றம் அவன் மறுக்கவில்லை. நீதிபதிகளைப் பார்த்தான். அவன் பார்வை வக்கீ லாயிற்று!

நீதிபதிகளே கலங்கியிருக்கின்ற னர்.

அந்த நடைப்பிணத்துக்குச் சட் டம் தரவேண்டியது—ஆயுள் தண் டனை. ஆனால் நீதிபதிகள் அத்தண் டனையை ஓராண்டாகக் குறைத்து அரசாங்கத்தாருக்கு சிபார்சு செய் துள்ளனர்.

கண்ணீர் உகுக்கச் செய்யும் இக் காட்சிபற்றி, நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பது — இன்றைய சமுகத்தின் படப்பிடிப் பாகும்.

"பசிக்கொடுமையால் ஒரு தந்தை கொலைகாரனாகியிருக்கிறான். தன்னை யும் மாய்த்துக் கொள்ள முயன்றி ருக்கிறான். இந்த வழக்கு, நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஏழ்மையையும் பசிக்கொடுமையையும் காட்டுகின் றன. சென்றவாரம் இதேபோல இரண்டு வழக்குகள் எங்கள் முன் னிலையில் வந்தன. அவைகளிலும் பெற்றோர்கள் ஏழ்மை காரணமாக குழந்தைகளைக்கொன்று தாங்களும் தூக்குப் போட்டுக்கொள்ள முயற் சித்திருக்கிறார்கள்..." இதுபோலக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

அடிக்கடி இதுபோன்ற வழக்கு கள் வருவதாக நீதிபதிகள் தெரி வித்திருக்கின்றனர்!

* * *

குழந்தைகளைக் கொல்லுமளவுக்கு, நாட்டில் பசியும் ஏழ்மையும் கோர உருவெடுத்துக் கூத்தாடு கிறது.

வாழப் பிறந்த மனிதன் — பிண மாகிறான். மிருகமாகிறான்.

வாழ்க்கையை நீக்கத்த ஒவ்வொரு வினாடியும் போராடிப் போராடிச் சாகிறான், இந்த வேதனைநாட்டில்!

ஆனால் சங்கராச்சாரியாரோ பக்திப்போதனை நடைபெறவேண்டு மெனச் சஞ்சலப்படுகிறார்.

அவர் பல்லக்குவாசி! அத்தகைய காமகோடிபீடத்தை மதம் அவருக் குத் தந்திருக்கிறது!

'பாழும் பரமசிவமே!' என்று கதிகலங்குமளவு ஏழ்மையும் இல்லா மையும் மக்களை வாட்டுகிறது. ஆனால், பசிபற்றி அறியாத சங் கராரோ மகேச பூஜை சரிவர நடை பெறவில்லையே என்று சங்கடப் படு கிறார்.

இதனால் சங்கராச்சாரிக்கு நாட்டி லுள்ள கஷ்டங்கள், தெரியாது என் பதல்ல.

பல்லக்குத் தூக்கும் ஏழைகளின் வியர்வை ஆறாக ஓடுவது கண்டும், அவர்களை விரட்டிவிரட்டி வேகமாக ஓடச் செய்வதால், மனம் மரத்துப் போயிருந்தாலும், மாபாதகநிகழ்ச்சி கள் மலிந்துவருவதை—அவர் அறி யத்தான் செய்வார்; ஞானக் கண் மூலம் அல்ல,—அவர் அறிக்கைகள் விடுக்கும் பத்திரிகைகள் மூலம்!

இருந்தும், சமுதாயத்திலிருக் கும் கோர நிகழ்ச்சிகள் அவர் கருத் தைக் கவரவில்லை.

சாவும், கொலையும் — சாமான்ய மாகத் தென்படுகின்றன.

சந்தியாவந்தனமும், அர்ச்சனை வசூல் குறைவும் மட்டுமே பெரிய பிரச்னைகளாகத் தெரிகின்றன.

சமுதாயத்திலிருக்கும் மேடு பள் ளம்—அவர் சிந்தையைக் கவரவில்லை.

கோயில்பூஜையும், குருக்கள் வரு மானமும் கவலையைத் தருகின்றன.

சங்கராச்சாரியாரைத் தெய்வீகப் பிறவியென்று செப்புவோருண்டு. 'இல்லை! இல்லை!! சாதாரண ஆள் தான். அவருடைய திருவிளையாடல் கள் அனந்தம்!' எனக் கூறுவோ ருண்டு. அதுவல்ல நமது பிரச்னை.

(8-ம் பக்கம் பார்க்க)

மீனம்பூர்

கடந்தவாரம், தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மீனம்பூர் என்ற கிராமத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது.

காங்கிரஸ் சர்க்காரில், துப்பாக்கிப் பிரயோகங்கள் சர்வசாதாரண நிகழ்ச்சிகள் தானென்றாலும், இக்கிராமத்தில் நடை பெற்றிருக்கும் சம்பவம் திடுக்கிடக்கூடியதாகும்.

ஒன்பது பேர், குண்டடிபட்டு செத்தனர். சுமார் இருபது பேர், காயமுற்றிருக்கின்றனர்.

ஒன்பது உயிர்கள்—பிணமாகின, அதுவும் ஒரே இடத்தில், ஒரு சில வினாடிக்குள், ஒன்பது உயிர்கள்!

முப்பது 'ரவுண்டு', துப்பாக்கிகள் முழங்கினவாம்!—நமக்கு வந்த தகவல் மட்டுமல்ல இதைத் தெரிவிப்பது. சர்க்காரே, தந்திருக்கும் அறிக்கை இது.

மீனம்பூர்—ஒரு சிறு குக்கிராமம். அங்கே முப்பது 'ரவுண்டு'கள் சுடவும், ஒன்பதுபேர் உயிரிழக்கவுமான சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இந்தக் கோர நிகழ்ச்சிக்கு காரணம், புதுச் சேரியிலிருந்து பல பொருள்கள் மீனம்பூர் வட்டாரத்தில் கடத்தப் பட்டிருப்பதாக செய்திகிடைத்ததன் பேரில், சுங்க அதிகாரிகள் போலீஸ் உதவியுடன் அதைக் கண்டு பிடிக்க சென்றதாகவும், அதுபோது கிராமவாசிகள் எதிர்த்ததாகவும், அதனால் கலாம் விளைந்ததாகவும் கூறப்படுகிறது.

புதுச்சேரி, பிரெஞ்சு ஆதிபத்தியத்தில் இருக்கும் சிறு பிரதேசமானாலும், இந்திய ஆட்சிக்கு கட்டுப்படாமல் இருந்து வருகிறது—இன்னும் இதனால், அங்கே, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள் மிக மலிவாகக் கிடைக்கின்றன. தங்கம், வைரம் முதலாய பல பொருள்கள், இந்தியாவைவிட மிக மலிவாகக் கிடைக்கின்றன—அந்த சிறு பிரதேசத்தில். அவ்வளவு மலிவாக இருப்பதால், அங்கிருந்து பல பொருள்களைக்கொண்டு வந்து இங்கே விற்றுப் பணம் சம்பாதிப்பதில், பலர் ஆசைகொண்டு, அதுபோல செய்தும் வருகின்றனர்.

இதைத் தடுக்கவேண்டுமென இங்குள்ள சர்க்கார் முனைவதும் முயற்சிகள் எடுப்பதும், தகாத காரியம் என எவரும் கூறார்.

ஆனால், தடுக்கும் நோக்குடன் ஒரு கிராமமே குண்டால் அடிக்கப் பட்டிருக்கிறதென்றால், பலர் சாகடிக்கப்பட்டனரென்றால், நல்லோர் கண்டிக்காமலிரார்.

மீனம்பூர், சம்பவம் பற்றி பகிரங்க விசாரணை நடைபெறவேண்டுமென சென்னை சட்ட சபையில் பலர் வலியுறுத்தியிருக்கின்றனர்.

இதையே நாமும் கூறவிரும்புகிறோம்.

தகாத செயல் நடைபெறாமல் தடுக்கவேண்டியது சர்க்காருடைய பொறுப்பாயிருக்கலாம். அதற்காக தறுதலை ஆட்டப் போடுவது, மனிதப்பண்புக்கேற்ற செயலாகாது.

போலீஸ் அதிகாரிகளை, மேற்படி கிராமவாசிகள் தாக்கிய தன் விளைவாக, துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு நேர்ந்தது, என்று கூறப்படுகிறது—சர்க்காரால்.

போலீஸ் அதிகாரிகளும் மனிதர் தான், அவர்களுடைய உயிருக்கு ஆபத்து வராமல் காக்கப்படவேண்டியதும், அத்யாவசியமானதுதான்.

ஆனால் அதற்காக, ஏன்'முப்பது' முறைசுடவேண்டும்? கிராமவாசி ஆயுதபாணிகளல்லவே! கத்தி கூறியும் அவர்கள் கையிலிருந் கூட, ஒரு துப்பாக்கி ஆகாயத்தை பார்த்து அலறினால் போது அவர்கள் கலகத்தை அடக்க.

இருந்தும் ஏன், அவ்வளவு த வைகள் சுடவேண்டும்?

இந்தக் கேள்விக்குப் 'பதில் வேண்டியது, சர்க்காரின் பொறு பாகும்.

மாதம் ஒரு புத்தகம்!
விருந்து
பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ.எல்.டி.
ஒவ்வொரு ஆங்கில மாதமும் 15-ம் நாளில் வெளிவருகிறது

இது ஒரு "பொன்னி" வெளியீடு
விலை 8 அணா
முதற் புத்தகம்
இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது.

ஏஜண்டுத் தோழர்களுக்கு

சி. என். ஏ. தீட்டிய 'அதிர்ச்சிக்கு வைத்தியம்' என்ற நூல் காஞ்சிபுரம், முத்துபதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.

இது, 'திராவிடநாடு' ஏஜண்டுகளுக்குமட்டும், இப்பொழுது பத்திரிகைகள் செல்லும் எண்ணிக்கைப்படி அனுப்பப்பட்டுள்ளன. இதை தனியிதழ், முக்கிய நேரங்களில் வருகிறதே, அதுபோலவே கருத வேண்டும்.

அடிக்கடி ஏற்படும் அரசியல் கொந்தளிப்புகள்பற்றி இத்தகைய நூல்கள் தொடர்ந்து வெளிவரும்.

தனிப்பட்ட புத்தக வியாபாரிகளுக்கு அனுப்பப்படமாட்டாது. சந்தாதாரர்களும், தனிப்பட்ட புத்தகம் வேண்டுவோரும் மூன்று அணா தபால்தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

முத்து பதிப்பகம்,
காஞ்சிபுரம்.

அவர்கள்!

★

அவர்கள் வெளியில் விரைந்து
்களைச் சேர்க்க அலைந்தனர்.

எவரும் கிடைக்கவில்லை. ஏக்கம் வர்களைப் பிடித்துக்கொண்டது.

மீண்டும் தேடினர்!-இரண்டொரு கிடைத்தனர்!!

ஆனல், அவர்களைச்சோம்பல் விட ல்லை! தேடிப் போனவர்கள் ஊக் த்தை கைவிடாது அவர்களை ழைத்து வந்தனர்,

மாலை ஆறு மணியும் அடித்தது. றிப்பிட்ட நேரம் வந்தும் வர வண்டியவர்கள் வரவில்லை.

கடைசியாக ஒவ்வொருவராக த் தொடங்கினர்.

இருபது பேர் வந்து சேர்ந்து ட்டனர்.

அப்படியும் 'கோரம்' கிடைக்க ல்லை. குறைந்தது முப்பத்து ான்கு பேராவது வரவேண்டுமே!

ஆம், 'விப்'புகள்தான், வெளியில் டினர், பார்லிமெண்ட் உறுப்பி ர்களைத் தேடி!

ஆனல், அவர்களோ கிடைக்க ல்லை! கிடைத்தவர்களோ குறிப் ட்ட நேரத்தில் வந்து சேரவில்லை.

அப்படி, இப்படியாக முப்பத் தொரு பேர் சேர்ந்தனர், அதிலே ான்கு பேர் மந்திரிகள்!

எப்படி, பார்லிமெண்ட் கூட்டம் டக்கிறதென்று எண்ணினல் வதனையாகத்தானிருக்கும்!

எவ்வளவு உற்சாகம்! எவ்வளவு ஆர்வம் அவர்களுக்கு!

அவர்கள் அப்படி அக்கரையற் றிருக்கிறார்கள்!- ஆனல். அந்த அக் கரையற்றவர்கள்தான், இந்நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள்!

இவர்களைக் கூட்டிவைத்து காரிய மாற்றுபவர்கள் மந்திரிகள்! அவர் களின் எண்ணிக்கையோ, நால்வர்! இவர்களை நம்பி நாடிருக்கிறது!

இவர்கள் சேர்ந்திருக்கும் மண்ட பம், பார்லிமெண்ட்; இந்நாட்டின் உயிர்நிலை!

அவர்கள் ஏன் அப்படி அசட்டை யாக இருக்கிறார்கள்!! ஏன் அத் துணை அலட்சியங் காட்டுகிறார்கள்!

அதுவும் இந்த அவல நிலையை கல்வி மந்திரி, கனம் அபுல்கலாம் ஆஜாத் கூறியிருக்கிறார்!

அவர்களின் அரசியல் ஆயுள் அண்மையில் முடியப்போகிறதே, என்ற எண்ணத்தாலா! அப்படியானு லும், அவர்களின் நடவடிக்கைகளில் அவசரமல்லவா, அதிகம் இருக்க வேண்டும். காற்றுள்ளபோதே தூற் றிக்கொள்ளப் பார்ப்பார்களே!

தங்கள் பதவிகாலம், முடிவதற் குள் செய்ய முடிந்ததைச் செய்து விடத்துடிப்பார்கள்.

ஆனல், இவர்கள் அந்தியகால நடை நடக்கிறார்கள்!

ஆறுமணிக்கு கூட்டம் என்றால், ஏழுமணிக்கு வருகிறார்கள்.

காலையில் நடந்த கூட்டத்தில் நடந்த சட்ட நிறைவேற்றத்தொ டர்ச்சி மாலை ஆறுமணிக்கு என்று அறிவித்திருந்தும் வரவில்லை! தேடிப் போயும் கிடைக்கவில்லை! கிடைத்த வர்களோ வேண்டிய எண்ணிக் கைக்கு குறைவானர்கள்!

அவர்கள், அப்பொழுது என்ன நினைக்கிறார்கள்!

அன்று நிறைவேற்றப் பட்ட சட்டம் சரியில்லையென்று நினைக்கிறார்களா? அல்லது, அந்த மண்டபம் பிடிக்கவில்லையா? இல்லை, இதைவிட அந்த அந்திநேரச்சந்திப்பு கள் வேறுபல இருந்தனவோ, அறி யோம். ஆனல் அவர்கள் வரவில்லை!

அவர்கள் செய்ய முடிந்ததைச் செய்துவிட்டோர். இனி நாம் ஏன் தவிக்கவேண்டும், அந்தியகாலத்தில் சாந்தத்துடன் உலவுவோம் என் ணியிருப்பரோ வெனில், அதுவும் இல்லை!

ஏனெனில், பதவிச்சண்டையில், வெளி கூடாரங்களில் வீரம் பேசு வோர் பலர் இருக்கிறார்கள் அதில்!

பின் ஏன் அவர்கள் அப்படி அலட்சியமாக நடந்து கொள்கி றார்கள்!

இதற்குக் காரணம், உண்டு. பலர் அக்குற்றங்களை எடுத்துக் காட்டி யுள்ளனர்.

அவர்கள் அலட்சியத்தால் அல்ல, அப்படியிருப்பது! அவசரமில்லா மலுமல்ல!

அவர்கள் வாழ்விற்கு வேண்டி யது பதவி! அந்த பதவியிருந்தால், அதற்குரிய நிலை நாட்டோருக்குத் தெரியும்! எதையும் சட்டமாக்கும் உரிமை படைத்தவர்கள் அவர்கள் என்ற மிரட்சியிருக்கும் ஊராருக்கு! அந்த மிரட்சியை முதலாக்கி, அவர் கள் ஊர்வலம் வரமுடியும்!

ஆனல், அந்தப் பதவிக்குரிய பணியைப்புரிந்தவர்கள் சிலர். அந் தச்சிலருக்கும், இந்த சபலம் வந்து விட்டது போலும்!

ஆகவே பதவி வந்ததே போதும், இனி பார்லிமெண்ட் போவதும் ஏனே என்று பாடியபடி அவர்கள் உள்ளனர்.

அடுத்த ஜனவரியில் பொதுத் தேர்தல் வருகிறதென்கிறபொழுது தான் அவர்களுக்கு ஆயாசம் வரு கிறது! அந்த ஆயாசம் போக்க,

(8-ம் பக்கம் பார்க்க)

S. R. Process,

திராவிடநாடு

ஞாயிறு] 9—9—51 [காஞ்சி

போதை தெளியட்டும்!

★

அடக்குமுறைகள் அளவை மீறுகின்றன! வரம்பைத் தாண்டுகின்றன.

அவைகளை ஏவிவிடும் ஆட்சியாளர்கள், மமதைகொண்ட எதேச்சாதிகாரிகளின் பரம்பரையினரல்ல—மக்கள் மத்தியிலே உலவியவர்கள்!

மக்களின் உரிமைகளைப் புரிந்தவர்கள்! அவர்களின் உள்ளத்தின் உணர்ச்சி-வெள்ளத்தைத் தெரிந்தவர்கள்!

அவர்களும், மக்கள் சர்க்காரென்றே பேசுகின்றனர்! ஆனால் மக்கள் உரிமைகளை மதியாது, அடிப்படை உரிமைகளையே தூசுகளென ஏசுகின்றனர்!

அவர்கள், இந்தப் பீடமேறுமுன் பேசிய பேச்சுகளை மறந்துவிட்டனர்! இன்று நம்மைத் தூற்றித் திரிவதே தொழிலாகக்கொண்டுள்ளனர்!

மக்கள் உரிமை பேசி, மன்றம் அமைத்த அவர்கள், மண்டை வீங்கி, மமதையாளர்போல, ஆடத் தொடங்கினால், ஆபத்து அணைக்கும், அழிவு தழுவும் அவர்களை!

இதனை அவர்கள் அறியாது ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்—தோள் தட்டி ஆர்ப்பரிக்கிறார்கள்!

ஆளவந்துவிட்டதாலேயே, அடக்குமுறை ஆயுதங்களை ஏவிவிடுவதே வேலையெனத் திரிகின்றனர்!

பேச்சு சுதந்திரத்தைப் பறித்திட சட்டமிடுகின்றனர்! தடை விதிக்கின்றனர்!

ஆனால், இதே பேச்சு சுதந்திரத்தைப்பற்றி அவர்கள், ஆளும் ஆளாகாதவர்களாக இருந்த நேரத்தில் என்னென்ன கூறியிருக்கிறார்கள்!

அந்தப் பழைய ஏட்டைப் புரட்டிப் பார்த்தால் புதிய பாடம் கிடைக்கும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.

நாம் கூட்டம் போட்டால் 144 தடையுத்தரவுகளை, தயங்காது, தளராது வீசுகிறார்கள்!

கூட்டம் நடத்துவோரை எச்சரிக்கிறார்கள்! பேசப் போவோரை மிரட்டுகிறார்கள்! கேட்கக் கூடுவோரை விரட்டுகிறார்கள்!

இந்த சுதந்திர வீரர்கள் ஆட்சியில், பேச்சு சுதந்திரம் படும் பாடு இது!

இவர்கள் இது குறித்து வெள்ளையர் காலத்தில் வாய் கிழியக் கூவி

னர்! தொண்டை வரள வரள சரமாரியாகப் பேசினர்! ஏசினர்!

144—இது நம்மை மாய்க்கவந்த பேய்.

144—நம்மை அடிமையாக்கி, அடித்து மிரட்டும் அரக்கன்.

144—சட்டமல்ல, நம்மைக் கொட்டிடும் தேள், கடித்திடும் பாம்பு.

144—தடையல்ல, வாள்—அது நம் நாக்கை அறுக்கிறது. இது நாக்கறுப்பு சட்டம்.

144 தடை போடுவது, மனித உரிமையைப் பறிப்பது, மீறுவோம், தடுத்தால் சீறுவோம்.

இப்படி அவர்கள் பேசியதை, மக்கள் மறக்கவில்லை—ஆனால் அ[வர்]கள் மறந்துவிட்டார்கள்!

சகுந்தலையை மறந்துவிட்டா[ன்] துஷ்யந்தன்—இதற்கு தூர்வா[சர்] இட்ட சாபம் காரணமாம்!

இந்தத் துஷ்யந்தர்களின் மற[திக்]குக் காரணம், சாபமல்ல, பான[ம்]! அதுவும் மயக்கந் தரும் ம[து]பானம்!

ஆட்சியாளர்கள் மதுவருந்தி[விட்ட]னர்! ஆகவே மயங்கிக் கிடக்கி[ன்]னர்!

ஆகவேதான், வெறியர்கள[ாகி]விட்டார்கள்!

போதை தலைக்கேறிவிட்[டது]! ஆகவே, நினைவிழந்து, நிலை [தடு]மாறி, அலை மோதுகிறார்கள்!

மது விலக்கு செய்தவர்க[ள் த]யிற்றே நம்மாள்வார்கள்! அவர்க[ள்] போதையிலே, உருளுகிறார்கள்!

ஆம், அதிகாரமும் ஒரு ம[து] தான்! அந்த மது தரும் போ[தை] மற்ற மதுபானங்களால் ஏற்ப[டும்] மயக்கத்தைவிட மகத்தான [து]; தீர்க்கமுடியாதது!

ஆகவே, ஆட்சியாளர்கள் அதி[கார] மதுவருந்தி, ஆணவ போதையே[றி] அடக்குமுறை ஆட்டம் ஆடுகிறார்[கள்]!

சொன்னதை மறந்துவிட்[டார்]கள்! 'பாட்டில்' பாஷையிலே [சொல்வதானால்] 'பீப்பாய்' நடை நடக்கிறார்கள்!

அதிகார போதை, அவர்[களை] ஆட்டி வைக்கிறது!

* * *

இந்த வாரம் இரண்டு இ[டங்]களிலே, இந்த போதையி[னால்] விளைந்த வேதனைகளைக் கண்டோ[ம்].

சித்தையன்கோட்டை, தே[...] தாமரைக்குளம் என்ற இரண்[டு] இடங்களில், அதிகார போ[தை]யேறிக் கிடக்கும், ஆட்சியாளர்[கள்] தங்கள் அடக்குமுறை நாட்டியம[ாடி]விட்டார்கள்.

கிளைக்கழகத் தோழர்களுக்[கு]

கிளைக் கழகத்தின் பெய[ர்] பொறிக்கப்பட்ட கொடிக[ளை] காஞ்சி மத்திய கழக நிலைய[த்]திற்கு அனுப்பிவைக்க வேண்[டு]கிறோம்.

இரண்டு ஊர்களிலும், நம் கழகக் கூட்டங்கள் கூடக்கூடாதென தடை விதித்துவிட்டனர்.

கழகம் பிறப்பித்த கட்டளைப்படி தடையை மீறத் தீர்மானித்தனர் தோழர்கள்.

சித்தையன் கோட்டையில், பேசச் சென்றவர் காஞ்சி. கல்யாண சுந்தரம். இயக்கம், நாட்டுக்களித்த பரிசுகளில், அவர் ஒரு நல் முத்து! அவர் இன்று, நேற்று பேசுபவரல்ல. பல ஆண்டுகளாக, புண்பட்டுப்போன சமூகத்தின் கோணல்களை, சிக்கல்களை எடுத்துக் காட்டிடும் அறப்பணி புரிபவர். அவர் பேச்சு, நாட்டுக்கு நல் மருந்து! இருந்தும், அவர் பேசக் கூடாதெனத் தடுத்து விட்டனர்.

அவர் பேச்சிலே, எழுத்திலே, மட்டும், 'சூடு' அதிகம் உள்ளவரல்ல—செயலிலும் அப்படித்தான் என்பது, மதுரையில் கருப்புக் கொடி நிகழ்ச்சியில் சிறை புகுந்த பொழுது, நாடுகண்டது, வாயார வாழ்த்தியது! அச்சூடு தாங்கிடாது, சர்க்கார் ஆடியதைக் கண்டு நாடு சிரித்தது, நாமும் சிரித்தோம்!

அவர் தடையை மீறத் திட்டமிட்டார். அவரைப் பின்பற்றி தோழர்கள், எஸ். எஸ். நடராசன், கே. எல். காமராஜன், எஸ். வெங்கடாசலம், எம். எஸ். எஸ். மணி, அப்துல்காதர், சாகுல் அமீது, காளிநாதன், ரத்தினசாமி, காமாட்சி ஆகியோர் உடன்வர உடன்பட்டனர். ஆனால், ஆட்சியாளர்களோ, அவர்களை வட்டமிட்டனர், சட்டம் பேசினர், கடைசியில் சிறையிலும் வைத்துப் பூட்டினர்!

இனி தோழர்களை, வழக்கு மன்றத்தில் நிறுத்திடுவர் — குற்றஞ்சாட்டுவர்.

* * *

சட்டமும், சமாதானமும் நிலைக்க வேண்டும் என்பதிலே அதிக கவலையும், அக்கரையும் கொண்டவர்கள் நாம்.

அவர்கள் சட்டத்தை மீறி, சமாதானத்தைக் கிழித்தெறிந்து, ஆகஸ்ட் டாட்டம் போட்டபொழுதெல்லாம், சட்டத்தின் அவசியத்தைக் காட்டியவர்கள். சமாதான விரோதிகள் ஆகி, நம் மக்களை நாமே அழித்திடும் பெரும் பழிக்காளாகக் கூடாது என்று கூறியவர்கள், நாம்.

தண்டவாளத்தைப் பெயர்த்தார்கள்!

தபால் நிலையங்களில், 'இலங்காதகனம்' நடத்தினார்கள்!

தந்திக் கம்பிகளை யறுத்தார்கள்—சர்க்கார் நிலையங்களை இடித்தார்கள்!

அழிவு வேலைகளில் அவர்கள் ஈடுபட்டனர்!

புத்தகக் கண்காட்சி.

மாநில மாநாட்டில், கண்காட்சி வெகு சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதில், புத்தகக் கண்காட்சியும் இடம் பெறுகிறது. ஆகவே, புத்தக வெளியீட்டாளர்களும், எழுத்தாளர்களும், கடந்த மூன்றாண்டு காலத்திற்குள் வெளிவந்துள்ள திராவிட இயக்க சார்புடைய நூல்கள் இரண்டிரண்டு காஞ்சிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

சட்டத்தை தட்டி நடந்தனர்—சமாதானத்தை எட்டியுதைத்தனர்!

அவர்கள் அதற்கு சுதந்திரதாகம், சுயேச்சை வேகம் என்று காரணங் காட்டினர்.

ஆனால், அவர்களேதான் இன்று நமக்கு, தடைமேல் தடைபோட்டு, தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்கிறார்கள்!

சட்டமும், சமாதானமும், நமக்குத் தெரியும். ஆனாலும், அந்த சட்டம், அர்த்தமற்ற முறையில், அவசியமற்ற நேரத்தில், அனாவசியமான இடத்தில் பிரயோகிக்கப்படும் பொழுது, எப்படி பொறுத்திருக்க முடியும்?

சட்டத்திற்கடங்கியவர்கள் என்பதாலேயே, நம்மை சட்டத்தைக் காட்டி மிரட்டிவிட முடியுமா?

சமாதானம் விரும்பிகள் நாம் என்பதையறிந்து, அந்த மூலமந்திரத்தை ஓதியே நம்மை மூலையில் உட்காரவைத்துவிட முடியுமா?

அவர்கள் செய்திடும் அக்கிரமங்கள் கோப்பை நிறைந்து வழிகிறது. ஆகவேதான் மீறிடத் தீர்மானித்தோம், தோழர்களும் மீறினார்கள்.

ஜனநாயகம் வேண்டும் என்று பேசாதாரில்லை!

ஜனநாயக ஆட்சியிலே தொடர்ந்து நாம் தொல்லைகளை அனுபவித்து வருகிறோம்.

நம் புத்தகங்களை சட்ட விரோத மானவை என்றனர். ஆசிரியர்களை சிறைக்கனுப்பினர்! அபராதம் வாங்கினர்!

நாடகங்களைத் தடுத்தனர்! நடித்தவர்களை பிடித்தடைத்தனர்!

தாங்கிக் கொள்கிறோம், அத்தகைய உரம் உள்ள நெஞ்சிருக்கிற காரணத்தால்.

சித்தையன் கோட்டையில், நடந்தது, இந்த ஆட்சியாளர்களின் போதை தெளிவிக்கும் சவுக்கடி!

தென்தாமரைக் குளத்திலே, பூத்திட்ட புத்துணர்ச்சி மலர், இவர்களின் அதிகார மது தரும் மயக்கம் தீர்க்கும் சக்தி படைத்தது!

தோழர்கள் தடையை மீறினார்கள்! காரணம், சட்டம் என்ற பெயரால், அதிகார மது வெறியர்கள் அடைந்துள்ள மயக்கம் தெளிந்திட!

144 தடை உடைபட்டது, ஏன்? அதிகாரபோதையின் புலம்பல் ஓய, வெறிக்கூத்து சாய!

இதற்கு தலைமைதாங்கிய, காஞ்சி தந்த காளை, கல்யாணசுந்தரத்தையும், அவர்வழி நின்ற, திராவிடத் தீரர்கள் அனைவரையும் பாராட்டுகிறது நாடு—அந்தப் பாராட்டிலே, நாமும் கலந்து மகிழ்வோம்!

5-ம் பக்கத் தொடர்ச்சி

அந்தி நேரத்தில் இப்படி உலவச் சென்று விடுகிறார்கள்!

பார்லிமெண்ட் உறுப்பினர்கள் இப்படி! ஆனால் பத்திரிக்கை நிருபர்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர்! இதையும் கல்வி மந்திரியாரே குறிப்பிட்டுள்ளார்!

உறுப்பினர்கள் வரவில்லை! வந்தவர்களும் காலங் கடந்தே வந்தனர்! ஆனால், நிருபர்கள் வந்திருந்தனர்! குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே, ஏராளமாக!

ஆகவே, அந்த மண்டபத்தில், உறுப்பினர்களின் விருப்பத்திற்கான நடவடிக்கைகள் மிக மிகக் குறைவு, ஆனால் பத்திரிக்கை நிருபர்களுக்கு வேண்டியவை அதிகம் என்று தெரிகிறது!

வராத உறுப்பினர்கள் மீது குறை சொல்வதைக் காட்டிலும், அவர்கள் வந்து சேரவேண்டும் என்று ஆசையைக் கிளப்பாத பார்லிமெண்ட் நடவடிக்கைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்!

பார்லிமெண்ட் நடவடிக்கைகளில் உணர்ச்சியில்லை! ஆகவே உறுப்பினர்களுக்கு உற்சாகமில்லை! ஆகவே, அவர்கள் வருவதில்லை.

ஆனால், பத்திரிக்கை நிருபர்களுக்கோ, இத்தகைய சந்தர்ப்பம் வாய்ப்பதரிது, விடாது செய்தி வேட்டையாட ஏற்ற அரசியல்காடு அம்மண்டபம் என்று கூடி விட்டனர்.

உறுப்பினர்கள் கூடியிருந்த நேரத்தில்மட்டும் என்ன பேசிவிட்டார்கள்!

பார்லிமெண்ட் நடவடிக்கையை எப்படி எப்படிக் குறைக்கமுடியும் என்பதையே கண்ணுங் கருத்துமாகக் கவனித்து அதற்காவன செய்கின்றனர்,

நாளைக்கு விநாயகர் சதுர்த்தி, ஆகவே, பார்லிமெண்ட் கூட்டம் கூடாது, என்று பேசுவர்!

அவர்கள் நடத்துவது மதச்சார்பற்ற சர்க்கார்!

விசிறியறுந்து விழுகிறவரை பார்க்காதவர்கள், அம்மண்டலத்திலுள்ளோர்.

அந்த விசிறியறுந்து விழுந்ததற்காக, பார்லிமெண்ட் நடவடிக்கைகளைத் தள்ளிவைக்க வேண்டுபவர்கள் அவர்கள்.

காலத்தைச் சரியாக காட்டாத கடிகாரம், சென்னை சட்டசபையை அலங்கரித்த செய்தியும், அது பற்றிய கேள்வியும் நாம் அறிந்தவையே!

ஒட்டை விசிறி, ஒழுங்காகா ஓடாத கடிகாரம், சரியாக வராத சட்டசபை அங்கத்தினர்கள், மந்த மந்திரிகள், இவர்களை நடத்தும் விசித்திர பிரதமர், நடவடாக்கைகளை நடத்துவிக்கும் பொறுமைமிக்க சபாநாயகர் காணக் காட்சியாய், அதன் நடவடிக்கைகள் கேட்க இனிக்கும் கீதமாக அல்லவோ இருக்கும், நிருபர்களுக்கு!

அத்தகைய அழகு சுந்தரர்கள் நிறைந்த இடம் அது.

அவர்கள்தான் நம்மையாள்பவர்கள்! நம் நிலையை நிர்ணயிம்பவர்கள்!

இந்த அலட்சியசீலர்கள் கையில் தான் நாமும், நம் திராவிடமும் அகப்பட்டிருக்கிறது!

★

வாங்கிவிட்டீர்களா?

மூவர்ணம் தீட்டப்பெற்ற அழகான "திராவிடநாடு" படங்கள் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

விலை நான்கணு

விவரங்களுக்கு:-

திராவிடப்பண்ணை
தெப்பக்குளம்
திருச்சி.

சிங்கம் மார்க் பைப்பிங் & மெழுகுவர்த்தி

உரிமையாளர்,
எம். எஸ். சிவசாமி
பிரதர்.
தூத்துக்குடி.

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு மதகுரு என்று சொல்லி திரியும் மகானுபாவருக்கு சமுதாயத்தின் விஷநிலை தென்படுவதில்லை.

ஆனால் தன்னைச் சேர்ந்த குருமார்களின் செல்வாக்கு ஓங்காதது கண்டதும் குரல் உரக்கிறது—கூச்சலும் ஏச்சும் எழுப்பத்தெரிகிறது.

இந்த இடம்தான் சிந்தனைக் குரியது.

நாட்டைப் பாதிக்கும் பலசங்கதிகள் சாமான்யமாகிவிடுகின்றன.

ஆனால், தம்கூட்டத்துக்கு முன் போல செல்வாக்கில்லை, குறைகிறது என்னும் விஷயம் பெரிதாகப்படு கிறது.

இதனால், சங்கராச்சாரிக்குபொது ஜன நலத்தில் அக்கரை இருந்தது என்றோ, இருக்கவேண்டுமென்றோ நாம் கூறவில்லை.

இந்த ஒரு சாதாரண விஷயம் அவர்கள் எத்தகைய ஆசாமிகள் என்பதையாவது விளக்காதா, விளங் கிக்கொள்ளார்களா அந்தக்குட்டை யில் ஊறுவோர் என்பதுதான்.

சனாதனம், அதிலும் பார்ப்பன மாந்தரால் போற்றப்படும் வைதீகம் தங்கள் சுகதுக்கங்களை வைத்து தான் உலகை நோக்கும்.

பலர் காயமடைந்தனரென்றால் பதறாது, கதறாது. ஆனால் தமக்கு ஒரு சிறு புண் என்றால் உலகமே கதறவேண்டும் என்று விரும்பும்.

சங்கராச்சாரி, இந்த ரகத்தின் காவலர். ஆகவேதான் சொல்லி யிருக்கிறார் அதே அறிக்கையில் ஒரு விசித்திரமான யோசனை.

"கடவுளை நம்பி வழிபடும் எந்த கட்சியையும் நாங்கள் ஆதரிப்போம் நாளொன்றுக்கு 108 தடவைகள் எந்தக்கட்சி கடவுளை நாமத்தை பஜிக்கிறதோ அதையே நாங்கள் ஆதரிப்போம்!"

தினசரி 108 முறைகள்! கடவுளைப்பஜிக்கும் கட்சி அரசபீடம் ஏறுவதையை ஆதரிப்பாராம்!!

வேடிக்கை! விநோதம்!!

★

நாவென்ன, நாவே..................!

...க்கிழந்தார்!

...திருப்பதி வெங்கடாஜலபதி ...துவரை பக்தர்களிடம் வாங்கிய ...ணிக்கை வேறு!

...மனிதனின் உடலில் ஏற்படும் ...வசிய வளர்ச்சிகள் இரண்டு— ...ிர், நகம்! இரண்டும் வெட்ட வள...ம்! இதிலே ஒன்றைத் தெரிந் ...டுத்திருந்தார் அவர்! இப் ...பாழுது, காணிக்கையை மாற்றி ...ட்டாராம்! ஒரு பக்தைக்கு ...க்கு குளறலாம்! அது சரியாகி, ...வன்மை வந்துவிட்டால், நாக்கின் ...ரு பகுதியை காணிக்கையாக்குவ ...ாக வேண்டிக் கொண்டாளாம்! ...ப்படியே தந்தாளாம்! அவள் ...ந்தாளா, தரவில்லையா என்பது ...டக் கிடக்கட்டும்! இதனை நாட்டு ...க்களுக்கு ஏதோ பெரிய செய்தி ...ாகத் தரும் ஏட்டை மக்கள் அனு ...திக்கிறார்களே, அவர்களைச் ...சால்லவேண்டும்! பக்தை நாக்கி ...ந்தாள் அந்த நாக்கிழந்ததை ...ாட்டுக்குச் சொல்லும் நீண்ட நாக் ...களைக் கண்டிக்கும் நா வளரவேண் ...ம், நாட்டோருக்கு! மக்கள் நாக் ...ிழந்தாராகி விட்டால், ஆலயங் ...ளில் நாக்கு மட்டும் போகாது, ...ல்லறிவும் தானே போகும்! ...போய்க் கொண்டுதானே இருக் ...கிறது!

...றுக்குக! நறுக்குக!!

நாக்கு நறுக்கப்படக் கூடாது! அதுவும் ஆலயங்களில், அர்த்தமற்ற மூட எண்ணங்களால் என்று கூறி ...ாவை உள்ளுக்கிழுக்கு முன், ...றுக்கு, நறுக்கு, ஒட்ட நறுக்கு என்று கூவிடச் சொல்கிறது! ஏன்?

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு திருவாய் மலர்ந்தருளியுள் ...ளார்! என்ன தெரியுமோ? 'லோகத் திலே, பஞ்சம் பட்டினி பரவிண்டு ...வர்ரதே, இதுபற்றி ஏதேனும் சொல்லியிருப்பரோ' என்று எண்ணவேண்டாம். ஒரு சமயம் கையில் புல்லாங்குழல், ஒரு சமயம் சக்கிரம், ஒரு சமயம் பாணம், ஒரு சமயம் கடிவாளமும், கொரடா வும், உடனே கொரடா பிடித்த கையில். சின்முத்திரை இவ்வளவு லட்சணுதிகளையும் விளக்கி, ஸ்ரீஜயந்திக்கு வியாக்யானம் தருகிற நாக்கும் இருக்கிறது! இந்த நாக்கு நீண்டு, நீண்டுதான் மக்கள் மாண்டு போயினர், மூட மதியினுல்! இந்த ஸ்ரீஜயந்தியைப் பற்றிப் பேசுகிறார் ஜகத்குரு! இதனைக்கேட்டுக்கேட்டு, நாக்கைத் தருகிறாள் ஒரு பக்தை!

விலையைக் குறை!

பக்தியும், செத்துப் போகவில்லை! பக்தியைப் பணமாக்கும் பக்தி பாங் கர்களும் உலவிக் கொண்டுதானிருக் கிறார்கள்! இருந்தும் மக்களுக்கு வயிறார உணவு கிடைக்கவில்லை! பக்தை, நாக்கைத் தருகிறாள்! பக்தி யால், பூலோகத்திலேயே பரமனுகி விட்ட லோககுரு நாக்கை நீட்டு கிறார்! நாதன் பெருமையைக் காட்டு கிறார்! கல்கத்தாவில் ஒரு ஊர்வலம்- பஜனை ஊர்வலமல்ல! மூவாயிரம் பேர் கிளம்பினர்! உணவு, உடைவிலை விஷம் போல ஏறியிருப்பதைக் குறைக்க வேண் டும் என்று கோஷமிட்ட படியே இருந்தனர்! அவர்கள் கோவிந்த நாமம் பாடவில்லை! ஹர ஹர சிவ சிவா போடவில்லை! அவர்களைப் போலீஸ் வளைத்துக் கொண்டு தடி யடி தந்தது! நான்கு முறை கண் ணீர்ப்புகை பிரயோகம் செய்தது! இதில் ஊர்வலம் நடத்தியோரில் ஆறு ஆண்கள், இரண்டு பெண்கள், பதினொரு போலீஸ்காரர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் காயப்பட்டனர்! எப்படி? பக்தியும், பக்தியைபரப்பும் பாப்பிரமமும் இருக்கும் பூமியிலே தான் உணவு விலை 'கைலாசம்'வரை உயர்ந்து விட் டது! துணிவிலை, 'வைகுந்தத்தை' எட்டிப் பிடித்து விட்டது! நாட்டுக் குத்தேவை, உணவு, உடை இவை களின் விலையைக் குறை என்று கூறி டும்நாவை அடக்குகின்றனர்! ஆனால், மக்களை நாக்கிழந்தாராக்குப் மூடத் திருவிழாக்களுக்கு மூலாம் பூசிடு வோரின் நாவினை. அசையாதிரு என்று ஆணைபிறப்பிக்கும் ஆண்மை யில்லா நாவென்ன, நா, — அந்நா, படைத்த ஆட்சியென்ன ஆட்சி!

பிரிவினை வாரங் கொண்டாடுங்கள்

—✲—

செப்டம்பர் 17 திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாள்—கழகத் தோழர்களின் மறுமலர்ச்சி நாள் திராவிடத் தோழர் களின் புத்துணர்ச்சி நாள்! அந்த நாளைத் "திராவிட நாடு பிரிவினை நாளாக"த் தக்க முறையில் கொண்டாடும்படி கிளைக் கழகங்களை யும், கழகத் தோழர்களையும் பிற திராவிடப் பெருங்குடி மக்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

செப்டம்பர் 17, முதலாகக் கொண்டு அந்த வாரத்தை, "திரா விட நாடு பிரிவினை நாள்" கொண்டாடும் வாரமாகக் கொள்ளலாம்.

கொடியேற்றுவித்தல், ஊர்வலம் நடத்துதல், பொதுக் கூட் டம் கூட்டுதல், கழகக் கொள்கைகளை விளக்கித் துண்டு அறிக்கை வெளியிடுதல், நாடக அரங்கு—இசையரங்கு ஏற்படுத்தல் ஆகிய முறைகளைக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளாகக் கொள்ள வேண்டு கிறோம்.

விழாக் கொண்டாடும் தோழர்கள் அமைதி குலையாமல், ஆர்வங் குறையாமல், ஒழுங்கு, கட்டுப்பாடு உறுதி, ஊக்கம் ஆகிய பண்பு களை முறையோடு கையாண்டு விழாவைச் சிறப்புறவும் வெற்றிகர மாகவும் நடத்தும்படி வேண்டிக் கொள்கிறோம்.

இரா. நெடுஞ்செழியன்,
பிரச்சாரக்குழு செயலாளர்.

யாத்திரை

தொடர்கதை

5

உலகிற்கு

சுந்தரம்

உங்களுக்குச் சொல்கிறேன், என்றும் போலவே! இத்தனை நாட்கள், இருந்த நிலை வேறு இன்றையகருத்தும், பிறவும் வேறு! நாட்டுநிலையை, மக்கள் அவதியை, புதுமை எண்ணங்களை, சீர்திருத்த ஏற்பாடுகளைப் பற்றியே என் எழுத்தில், பேச்சில் கண்டிருப்பீர்கள். இன்று என்னைப் பற்றியே பேசுகிறேன். அந்த அவசியம் வந்துவிட்டது.

திடீரென்று ஒரு கடிதம் வந்தது. மலைத்துவிட்டேன். என் பழைய நண்பன் பார்த்திபன் தீட்டியிருந்தான்...என்னை மறந்துவிட்டாயா சுந்தர், நான் கல்லூரித் தேர்தலிலே 'கரணங்கள்' பலபோட்டுக் கடைசியில் உன் அறையில் வந்திருந்துகொண்டுப் படித்தபொழுது என்னைக்கேலி செய்வாயே—நான் படிக்க இடத்திற்கும்; உண்ண உண்டிக் கடைக்கும், குளிக்க குட்டைக்கும், குளத்திற்கும் அலைந்த அலைச்சலைப் பற்றி அருமையான கிண்டல் புரிந்திருந்திடுவயே...அந்த நிகழ்ச்சி ஒன்றே என்னை அறிமுகப்படுத்தி விடும்......இப்பொழுது நினைவிற்கு வருகிறதா?—

பார்த்திபனை நான் மறக்க முடியுமா? என் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள ஆறாத புண்ணிலிருந்து வடிந்திடும் இரத்தத் துளிகள் ஒவ்வொன்றும் அவன்பெயரைத்தான்சொல்லுகின்றன. ஆம், என் இன்பச்சித்திரம் பத்மாவைப் பறித்துக் கொண்டவன் அவன். ஆனால் அவனுக்கு அவன் செய்கிற பெருந் தவறு தெரியாது! தெருவில் நடந்து செல்கிற பொழுது நம் செருப்புக் கடியில் ஒரு புழு மாட்டிச்சாகிறது. தெரிந்தா இந்தக் கொலையைச் செய்கிறோம்? இல்லை. அதுபோலத்தான் அவன் என் இதயத்தை மிதித்துத் துவைத்து நாசமாக்கி விட்டான்.

அவன் எழுதியிருக்கிறான்...... ஐயோ, என் கை நடுங்குகிறது...... இதயம் உயர்ந்து தாழ்கிறது ஓராயிரம் தடவைகள்! அவன் மணந்த பத்மா என்னை மறக்கவில்லை. என் நினைவின் ஈரம் இன்னும் காயவில்லையாம் அவள் அவனை விட்டுப்பிரிந்து விட்டாள். பத்மா ஒரு மின்னல்—கண நேரத்தில் தோன்றி மறைந்து விட்டாள் அவனது வாழ்க்கை வானத்தில். பார்த்திபனுக்கு அவனுக்குப் பிடித்த பொன்னியையே மணம் முடித்துவிட்டுக் கிளம்பி விட்டாள். ஆனால் அவளை மறக்க அவனால் முடியவில்லையாம். அவன் நெஞ்சின் துடிதுடிப்பு—அடங்க வேண்டுமானால் அவன் என்னைச் சந்திக்க வேண்டும் என்று கூறியிருந்தான். அதுவும் பத்மாவை அழைத்துக்கொண்டு! அந்தோ, அந்த சோக நாடகம் மீண்டும்... நான் மறக்க முயற்சி செய்துகொண்

தில்லை-வில்லாளன்

டிருக்கிற சந்தர்ப்பத்திலா இந்தப் புதுவகை அனுபவம்?

அவன் எப்படி கல்லூரித் தேர்வில் தோல்வியடைந்து குறுக்கு வழிகளில் புகுந்து வெற்றி பெற்றானோ அப்படியே வாழ்க்கையிலும் முயன்றான் வெற்றிபெற்றான் என்றாலும் விபரீதத்தில் முடிந்துவிட்டது. பொன்னி அவனுக்குத் தங்கையாகிறாளாம் அவனது தந்தையின் தகாத நடத்தை அம்பலத்திற்கு கொணரப் பட்டால்! அவனது தந்தைக்கும் வீட்டு வேலைக்காரிக்கும் பிறந்த பெண்ணும் அவள்..........அவன் அழுதுவிட்டான் போலும்......அந்தக் கடிதத்தின் எழுத்துகள் எல்லாம் கண்ணீர்த் துளிகள் பட்டுப் பட்டுக் கலைந்திருந்தன. ஒரு நண்பனுக்குத் துரோகம் செய்ததால் வந்த வேதனைத் தண்டனைதானும் அது—அவளை விட்டு எப்படி நகர்வது? அவள் நிறை 'கர்ப்பிணி'...... அவன் தந்தை அன்பானந்தரிடம் உள்ளதையெல்லாம் சொல்லிக்கேட்

டாளும்......அவர் தயங்கித் தய
உண்மை யென்றாராம்.

தங்கையை மனைவியாக்
கொண்டு வாழ்வதா...அவனை இ
யம் இடித்தது!

பொன்னி பிரசவ வேதனையல
கிற பொழுது அவனை அழைத்
ளாம். அருகில் சென்றவுடன் "அ
தான்...அக்காள் கைபட்டால்தா
நான் சுகமடைய முடியும்...பத்
அக்காளை வரவழையுங்கள்
என்றாள்.

பத்மா வருவாளா? பறந்
சென்று விட்ட பஞ்சவர்ணக்கி
மீண்டும் அதே கூண்டிற்கு வரும

எனினும் நள்ளிரவில் ஓடின
காரில். பத்மாவிடம் பொன்னியி
வேண்டுகோளைத் தன் கண்
ரோடு கலந்து கூறியிருக்கிற
அவள் மறுக்கவில்லை. போய் த
தங்கைக்கான பணிவிடைகள்
செய்து விட்டுத் திரும்பிவிட்டா
பொன்னி ஒரு பெண் மகவை
பெற்றெடுத்தாள்.

என் வாழ்க்கையில் விடுபட
செய்தியை அந்தக் கடி
தொடர்ந்து சொல்லிக்கொண்டி
தது. வேறொரு காகிதக் கட்டை
புரட்டினேன். அன்றைய புத்
அஞ்சலில் வந்தது அந்த சிறு ஏ
மூட்டை! பிரித்துப் பார்த்தே
எல்லாம் காதல் கடிதங்களாக இ
தன. தினகரன் என்று கையெழு
திருப்பதைக் கண்டு திடுக்கிட்டே
நடக்க விருக்கும் மக்கள் ம
மண்டல மாநாட்டின் செயலா
தினகரன். அவன் செய்த அ
வேலைக்கு அத்தாட்சியாக அ
எழுதியக் கடிதங்கள், ஏமாற்
பட்ட பெண் மங்கையால் அ
பட்டிருந்தன. அந்தப் பெண் க
சாரமாகவே எழுதியிருந்தாள்.
மனிதன் செய்த தவறுதலுக்
ஒரு மாபெரும் இயக்கத்தை
தாக்கியிருந்தாள்.

அன்று எதையும் செய்யவில்லை
முடிய வில்லை.

நான் இருப்பது இன்பமாட
ஆனால் அங்கு வாழ்வோர் அ
டம் உயிருக்காகமன்றாடும் நோயா
கள். ஆம், ஏகாம்பரம் நடத்தி
சுவாச நோய்ச் சிகிச்சை சாலை
படுத்துக்கிடக்கிறேன். புகைச்சு
டால் நான் பெற்ற சுகம், சுவ
நோய், காச நோய்........ ஆ

ங்கே எலும்புக் கூடாகக்கிடக் றேன்.

அந்தி வேளை......என் அறையி ள் யாரோ நுழைந்தனர். "டாக் ரின்" அனுமதியின் பேரில் குடிக் ம் கடைசிச் சுருட்டின் கடைசி கைமண்டலத்தைக் கிளப்பினேன். ன் கண்களில், குளங்களில் மிதக் ம் பாசியைப் போலப் படர்ந் ருந்த, மஞ்சள் நிறம் விலகியது. து ஒளி வீசிற்று.

எதிரில் இருவர் நின்றனர்.

பார்த்திபன், பத்மா இருவரும் ன்னைப் பார்க்க வந்து விட்டனர். ன்னைக் கண்டவுடன் அவன் சிலை பாலானான். அவன் கரத்திலே இ ருந்த சாத்துக்குடி பழங்கள் கீழே ழுந்து உருண்டோடின. பத்மா ன் கண்களில் நீர் உருண்டோ ற்று.

"வா, பார்த்திபா...ஏன் நிற் றாய்?"........

அவன் என் அருகில் வந்தான்.

"ப...த்...மா..."

என் தொண்டை அடைத்துக் காண்டது. அவள் திடுதிடுவென டிவந்து என் காலடியில் விழுந் ழுதாள். அவளைத் தூக்கி நிறுத் த்தேற்றவேண்டும்போலிருந்தது. ன் உடலில் எழுந்து நிற்க சக்தி து? பார்த்திபன் எதையெதையோ சான்னான். பத்மா என் நோய் ருகிறவரை அங்கேயே இருப் தாக அடம் பிடித்து விட்டாள். மலும் அவள் நர்சு! பார்த்திபன் ட்டும் போய்விட்டான், அவன் அடிக்கடி என்னை வந்து பார்ப்பான்.

என்னைக் கொல்லாது கொன்று காண்டிருந்த 'குலதெய்வம்' எனக் துப்பணிவிடைகள் செய்ய வந்த றகு பிணி என்ன செய்யமுடியும்? நாயின் கடுமை குறைய ஆரம் த்து பத்மா இப்பொழுதுதான் ன், இதயத்தில் பொங்கிப் பொங்கி டங்கிப்போன எண்ணங்களை என் ரிடம் சொன்னாள். அவளது ஒரே ஆசை அவளது சகோதரியின் ாதல் திருமணத்தை வெற்றியோடு முடித்துவைப்பது என்பதுதான். அதை என்னிடம் சொன்னாள். ான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னேன்.

டாக்டர் ஏகாம்பரம் மாலை நேரங் ளில் வந்து என்னுடன் உரையாடுவது உண்டு. அன்றும் அப்படி வந்தார். லீலாவின் காதலன் இராமனைப்பற்றிப்பேசினேன். அவர்முகம் மாறியது. அவர் கண்கள் கலங்கின.

"ஏன் டாக்டர்.........." என்றேன் இருமிக்கொண்டே.

"சுந்தர்.....அவன் என் தம்பி!" என்றார்.

பிறகு அவனுக்கும், தனக்கும் நடந்த வழக்கைப்பற்றியும்எடுத்துக் கூறினார். அண்ணன் தம்பி சண்டை ஆற்றுநீரில் அம்புபாய்ந்து ஏற்படுகிற பிளவைப்போல! உடனே மறைந்துவிடவேண்டும். ஏகாம்பரந்தான் அந்தத் திருமணத்தைமுன் நின்று நடத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

இராமனை அழைத்துப், பேசினேன். அவனும் மறுக்கவில்லை!

பத்மாவும் ஏகாம்பரத்தின்மனைவி எழிலாளும் தோழிமார்களாகிவிட்டார்கள். வெகுசீக்கிரத்தில் அவர்கள் இருவரும் சேர்ந்து லீலாவையும் அவளது தாயையும் வரவழைத்துவிட்டார்கள்.

சர்க்கஸில் இருக்கிற மிருகங்கள் ஒன்றையொன்று வேடிக்கைப்பார்த்துக்கொள்ளுமாம். ஒன்று மற்றொன்றை ஆச்சரியமாக முறைக்குமாம். அப்படித்தான் அங்கு குழுமியிருந்தோர்கள் பார்த்துக்கொண்டார்கள். வாணவேடிக்கைபோலத்தான் நிகழ்ச்சிகளும், பூ பூவாகக் கொட்டும்பொழுதும், வானவெளியிலிருந்து வர்ணங்களை வாரியிறைக்கும்பொழுதும் சிரிக்கிறோம். ஆனால் அதுவே அருகிலே உள்ள கூரையிலே விழுந்து தீ விபத்தையும் உண்டாக்கிவிடும். அன்றைய நிகழ்ச்சி ஒரே ஆச்சர்யத்தைத்தான் அள்ளிவீசிக்கொண்டிருந்தது.

இன்ப மாடத்தில் சுந்தர் தலைமையில் இராமன் லீலா திருமணம் — நடத்த ஏற்பாடுகளாகிவிட்டன!

எழுந்து நடக்க தெம்பு வந்த எனக்கு இனிக் குந்திக் கிடக்கமுடியுமா? நான் பேசினேன்......இடையிடையே லொக்.......லொக்....... லொக்......சத்தம்! இருந்தும் திருமணத்தை முடித்துக்கொண்டு வந்தேன். என் காசநோய் வலுவாகிவிட்டது—பத்மா என்னுடனேயே திரும்பிவிட்டாள்.

காதல் புறாக்கள் பறந்தன—காசநோய்க்காரனுடன் அந்தப் மாடப்புறா வந்தது! நான் தடுத்தேன். அவள் அழுதாள்.

"பத்மா......அதோ பார் சூரியன் அந்திவானத்திற்கடியில் மறைகிறான். நம்காதலும் அப்படித்தான். நீ ஒரு பேசும் பெருந்தெய்வம். உன்னை நான் தீண்டக்கூடாது. தெய்வமாதாவாகிய உன் இதயத்திலும் சிறு 'சில்லரைத்தனங்கள்' இடம் பெறக்கூடாது."

"சுந்தர்......நான் தெய்வந்தான். அதற்குரிய கோவில் உங்கள் இதயம்."

"அது என்றோ உறுதியாகிவிட்டது, பத்மா!"

அவள் பேச முயற்சி செய்தாள் முடியவில்லை. முகத்தை என்தலைக்கடியிலிருந்த தலையணையில் புதைத்துக்கொண்டு அழுதாள், அவள் தலையை வருடினேன்.

"பத்மா......அழுகை கூடாது. நீ அறிவுள்ள பெண். உன் கடமை என்னை விட்டுப் பிரிந்து செல்வதுதான். மணமான மங்கை, மாற்றான் ஒருவனுடன் இருக்கலாமா?......" என்றேன்.

பத்மா பதட்டமாகப் பேசிவிட்டாள்.

"சுந்தர்......அது என் சொந்த விஷயம்...அதைப்பற்றி யாருடைய யோசனையும் கேட்கவில்லை!"

நான் பேசவே இல்லை. அவள் நெடுநேரம் உட்கார்ந்திருந்தாள். பிறகு எனக்கு இரவு உணவு எடுத்துவரச் சென்றுவிட்டாள்.

நான் சாளரத்தின் வழியாக வானத்தைப் பார்த்தேன். இருட்டு ......மேகங்களின் படையெடுப்பு! என் சிந்தனை சுழலவில்லை. எழுந்து சென்று விளக்கைப் போடவும் மனமில்லை இருட்டிலேயே கிடந்தேன். அப்படியே உறங்கி விட்டேன். பத்மா என்னை எவ்வளவு பாடுபட்டு எழுப்பியும் நான் எழவில்லை. ஆகவே அவளும் பட்டினியாகவே படுத்துவிட்டாள். என்ன விசித்திரம்......ஏதோ ஒரு பாசம் எனும் கயிற்றால் இப்படி ஆண், பெண் கட்டிவிடப்படுகிறார்கள். அவள் யாரோ, நான்யாரோ......எனினும் அவள் என்னைவிட்டுப் பிரியாமல் பட்டினி கிடக்கிறாள்!

(தொடரும்)

திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மன்றத்திலே மகத்தான சக்தியாக வளர்ந்து வருகிறது அது பொருளாதார ஏகாதிபத்தியத்தை வைதீகக் கொடுங்கோன்மையை ஒழித்து, தன்மானம் தழைத்திடும் **திராவிடக் குடி அரசு** அமைக்கப்பாடுபடும் நோக்கம் கொண்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் மட்டும் **650** கிளைக் கழகங்களைக் கொண்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா மாவட்டங்களிலும் சிறந்த முறையிலே மாநாடுகளை நடத்தி, மக்கள் மன்றத்திலே, கழகக் கொள்கைகளையும் திட்டங்களையும் விளக்கியிருக்கிறது.

வகுப்புநீதி, சீர்திருத்தம், பேச்சுரிமை எழுத்துரிமை போன்ற தனிப்பிரச்சினைகளை ஆராயும் நோக்குடன் தனி மாநாடுகள் நடத்தியிருக்கிறது.

கலைத்துறையில் மறுமலர்ச்சி காணவும், கலைமூலம் வீழ்ச்சியுற்ற நாடு எழுச்சியுறச் செய்யவும் பல நாடகங்களை நடத்தி மக்கள் மனதைக் குளிரச் செய்திருக்கிறது.

புதிய கருத்துகளை விளக்கியும், பழைமை எண்ணங்களின் பகுத்தறிவற்ற தன்மையை எடுத்துக் காட்டியும் திராவிட முன்னேற்றக் கழகத்தோழர்கள், பல ஏடுகளைத் தீட்டி, நாட்டுக்கு அளித்துள்ளனர்.

சர்க்காரின் அடக்குமுறை, சனாதனியின் சலசலப்பு, பொறாமை கொண்டோரின் எதிர்ப்பு, மாற்றுக் கட்சிகளின் மாச்சரியம், ஆகிய இடுக்கண்களைத் தாங்கிக்கொண்டு, பணியாற்றி வருவது, திராவிட முன்னேற்றக் கழகம்.

தடியடியும் சிறைவாசமும், துப்பாக்கிப் பிரயோகமும் கழகத்துக்குக் கிடைத்த பரிசுகள்!

தடை உத்திரவுகளை மீறி கஷ்ட நஷ்டம் ஏற்றுக்கொண்டிருக்கிறது கழகம்.

குழந்தைப் பருவத்திலேயே தியாகத் தழும்பு கிடைத்துவிட்டது, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு.

திராவிட முன்னேற்றக் கழகத்தை, வேறு கட்சிக்காரர்கள் **விசித்திரமான அரசியல் புதிர்** என்று கருதுகின்றனர்.

திரண்டுள்ள பலத்தைக்கொண்டு, நாட்டுக்கு நாசம் விளைவிக்கும் காரியத்தில் ஈடுபட எண்ணம் கொள்ளவில்லை, கழகம்.

திரண்டுள்ள பலத்தைக்கொண்டு, அரசியல் இலாபவேட்டை ஆடவும் விரும்பவில்லை.

சிறந்ததோர் குறிக்கோளைக் கொண்டிருக்கிறது, பயணம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பேதமற்ற சமுதாயம், சுரண்டலற்ற சமுதாயம், தன்னரசு கொண்ட சமுதாயம் எனும் உயர்ந்த குறிக்கோள்களை உள்ளடக்கிய **திராவிட நாடு திராவிடருக்கே** என்ற திட்டத்துக்குத் தளராது உழைத்து வருகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு
சென்னையில்

விரைவில் நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

விரைரே வாரீர்! **விடுதலைப் போரிலில் சேரீர்!**

Edited, Printed & Published by C, N. Annadurai M. A. at "DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.